DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 322 / 2023 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 7 |
| Name | திரு. சதீஸ் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | முதல் நிலை காவலர், குறும்பூர் காவல் நிலையம். |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) )**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 29-09-2025.(நேரம்: 12.41PM )

**முதல்விசாரணை**

1. நான் தற்போது குறும்பூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பாக ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 31.10.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது மாவடி பண்ணையை சேர்ந்த தெய்வசுந்தரம் மகன் கோபால கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை

பெற்று அந்த புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 69/2023 சட்டபிரிவுகள் 457,511,294(b),506(2) இதச வாக வழக்கு பதிவு செய்தேன். அந்த அசல் முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவினையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் ஸ்ரீவைகுண்டம் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் அதில் ஒரு நகலை விசாரணைக்கு வேண்டி விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 12.47PM)**

1.சம்பவம் நடந்து 2 நாள்கள் கழித்துதான் புகார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2.எதிரி அவர் வீட்டின் மாடியில் எந்தவொரு ஆயுதமும் இல்லாமல் சம்பவத்தின்போது நின்றிருந்ததாக புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

3.31.10.2023 ஆம் தேதி இரவு 09.40 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வழக்கின் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை. இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்படவில்ல.

5. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.